
அபிராமி அந்தாதி (உரையுடன்)



அபிராமி பட்டரின்

அபிராமி அந்தாதி

உரை

பேராசிரியர் அ. மாணிக்கம், எம்.ஏ.

டாக்டர் ச. மெய்யப்பன்

மெ. மீனாட்சி ஆச்சி

மணிவிழா

அன்பளிப்பு

16.7.93

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கித்தெரு, சென்னை-600001.

முதல் பதிப்பு: 16, ஜூலை, 1993.

விலை ரூ. 3.00

பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பனார்
மணிவிழா வெளியீடு

அபிராமி பெருமை

முனைவர் ச. மெய்யப்பன்

'அபிராமி அந்தாதி' என்ற இந்நூலை இயற்றியவர் அபிராமி பட்டர். 'அபிராமி' என்ற சொல் 'மிக்க அழகுடையவள்' என்று பொருள்படும். எனவே, பேரழகு வாய்ந்த அம்பிகையைப் பற்றிய அந்தாதி என்பது பொருள்.

'அந்தாதி' என்பது தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். ஒரு செய்யுளின் இறுதி அடுத்து வரும் செய்யுளின் ஆதியாய் அமைவது அந்தாதி. அந்தம் + ஆதி = அந்தாதி. இது நூறு செய்யுட்களால் பாடப் படுவதாகும். தமிழ் இலக்கியப் பரப்பில் நூற்றுக்கணக்கான அந்தாதி நூல்கள் உள்ளன. அவற்றுள் சிறந்தது இந்த அந்தாதி எனலாம். அம்பிகையின் அருள் திறத்தை நயந்து வியந்து மகிழ்ந்து நெகிழ்ந்து பாடுகின்றார் அபிராமி பட்டர். சக்தி வழிபாடுடையார் இந்நூலைக் கற்றுப் பயன்பெற்று வருகின்றனர். பொருள் நயம் சொல் நயம் உவமை நயம் கற்பனைப் பொலிவு இதனுள் காணப்பெறுவது கற்போர்க்குக் கழிபேரு வகை அளிப்பதாகும்.

பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 013.

அபிராமி பட்டரின் வரலாறு

சோழ நாட்டுத் திருக்கடவூரில் அபிராமி பட்டர் அந்தணர் மரபில் தோன்றினார். அவர் திருக்கடவூர் கோயிலில் வீற்றிருக்கின்ற அபிராமியிடம் அந்தரங்க ஆழ்ந்த அன்புடையராய் விளங்கினார். ஆனால் அயலவர் அறிய அந்த அன்பைப் புலப்படுத்தியதில்லை அவர். ஆதலால் அவர் மற்றவர்க்குத் தேவதையை வழிபடுபவர் போல் தோற்றமளித்தார். அவரிடம் வெறுப்புக் கொண்டார் சிலர். தஞ்சை மன்னனான சரோபோசியிடம் போய்க் குறை கூறினர்.

மன்னன் சரபோசி அபிராமி பட்டரைத் தன்னிடம் வரவழைத்தான். அவன் பட்டரை நோக்கி, "உம் கையில் உள்ளது யாது?" என வினவினான். அவர், "பஞ்சாங்கம்" என்றார். "நல்லது! நாளை என்ன திதி?" என்று வினவினான் மன்னன். பட்டர் "பௌர்ணமி" என்றார். உண்மையில் மறுநாள் அமாவாசை. பட்டரோ அதைப் பௌர்ணமி என்று கூறிவிட்டார். மன்னன் பட்டரின் விடையைக் கேட்டுச் சினம் கொண்டு "நாளை நீவிர் நிறைமதியைக் காட்ட இயலுமோ?" என வினவினார். பட்டர் "அபிராமியின் அருளால் காட்ட இயலும்" என்றார். அவன் அவரைச் சிறையில் இட்டான். பின் அவன் ஓர் ஏற்பாடு செய்தான். அக்கினி குண்டம் ஒன்று வளர்க்கப்பட்டது. மேலே ஓர் உறி. அது நூறு புரிகளை உடையது. அதிலிருந்து பட்டர் பாட வேண்டும். ஒவ்வொரு கவியைப் பாடி முடித்ததும் உறியின் ஒரு கயிறு அறுக்கப்படும். அவ்வாறு செய்து வர, 'விழிக்கே அருளுண்டு' என்ற தொடக்கம் கொண்ட 79ஆம் செய்யுளைப் பாடியபோது அபிராமி எழுந்தருளி காட்சி தந்தனள். அன்னையிடம் பட்டர் தம் குறையை முறையிட்டு அவளிடமிருந்து குண்டலம் ஒன்றைப் பெற்று மறுநாள் வானத்தில் விட்டெறிந்தார். அக்குண்டலம் வானத்தில் நிறைமதியாய் விளங்கியது. மன்னனும் மற்றவரும் நிறைமதி கண்டு தம் குறைமதி நீங்கப் பெற்றனர். பட்டரை வணங்கித் தம் பிழையைப் பொறுக்குமாறு வேண்டிக் கொண்டனர்.

இவ் வரலாற்றுக்கு மாறுபட்ட வரலாற்றை உரைத்தாரும் உளர். மாறுபாடான வரலாறுகள் அம்பிகையின்பால் அன்பர்கள் கொண்ட பக்தியின் மேன்மையை உணர்த்துவனவாகவே கொள்ளல் வேண்டும்.

அபிராமி பட்டரின்

அபிராமி அந்தாதி

காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

மாலையாய்க் கட்டப்பட்ட கொன்றையையும் சண்பக மலர் மாலையையும் அணிந்த தில்லையம்பதியில் உள்ள நடராசருக்கும் அவர்தம் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் உமையம்மையாருக்கும் தோன்றிய மைந்தனே! மேகம் போன்ற மேனியை உடைய கணபதியே! ஏழ் உலகங்களையும் பெற்ற சிறந்த அபிராமியம்மையாருக்கு அணியும் அந்தாதி எப்போதும் என் மனத்துள் பொருந்தி நிற்குமாறு அருளுவாயாக!

1. **உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்**
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

தோன்றுகின்ற உதய சூரியன், தலையின் உச்சியில் மங்கையர் வைத்துக் கொள்கின்ற குங்குமத் திலகம், ஞானியர் மதித்துக் கொண்டாடும் மாணிக்கம், மாதுளமலர், தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகள் துதிக்கும் மின்னல்கொடி, மென்மையான மணத்தையுடைய குங்குமக் கலவைநீர் என்று அடியார்கள் உவமையாக எடுத்துக் கூறும் திருமேனியையுடைய அபிராமி அம்மையார் எனக்குச் சிறந்த துணையாவார்.

(அபிராமி – பேரழகுடையவள்)

2. **துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்**
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்பஞ் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவது அறிந்தனமே.

திரிபுர சுந்தரி நான்கு கைகளிலும் குளிர்ந்த மலர் அம்புகளையும் கரும்பு வில்லையும் மென்மையான பாசம் அங்குசம் என்பனவற்றையும் கொண்டு விளங்குகிறாள். அப்பெருமாட்டியே எனக்குத் துணையும், நான் வணங்கும் தெய்வமும், என்னைப் பெற்ற தாயும், வேதமான மரத்தின் கிளையாகவும், அதன் தளிராகவும், பொருந்திய வேராகவும் விளங்குகிறாள். இதனை நான் அறிந்து கொண்டேன்.

3-4

3. அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் அன்பர் பெருமையெண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே.

திருமகளாய் விளங்குபவளே! வேறு எவரும் அறியாத இரகசியத்தை நான் அறிந்து கொண்டேன். அங்ஙனம் அறிந்து கொண்டு நின் திருவடியை அடைக்கலமாக அடைந்தேன். நின் அடியாரின் பெருமையை அறிந்து கொள்ளாத தீவினையுடைய உள்ளம் காரணமாக நரகத்தில் விழும் தொடர்புடைய மனிதரை அஞ்சி விலகினேன்.

4. மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

மனிதரும், வானவரும், இறவாத தன்மையுடைய முனிவரும், நெருங்கி வந்து தலை வணங்கும் சிவந்த அடிகளையுடைய கோமள வல்லியே! கொன்றை மாலையைச் சூடிய நீண்ட சடைமீது குளிர்ந்த இளம்பிறைச் சந்திரனும் பாம்பும் கங்கையும் ஆகியவற்றை அணிந்த தூயவரான சிவபெருமானும் நீயும் என் மனத்துள் வந்து தங்கி யருள்வீராக!

5. பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே.

பொருந்திய திரிபுரங்களின் தலைவி, செப்பை உவமையாகக் கூறும் இரு கொங்கைகளின் சுமையினாலே வருந்திய வஞ்சிக் கொடி போன்ற இடையை உடைய மனோன்மணி, நீண்ட சடையை உடைய சிவபெருமான் முன் காலத்தே அருந்திய நஞ்சினைக் கழுத்தில் நிறுத்தி அமுதம் ஆக்கிய அன்னை, தாமரை மலர் மீது வீற்றிருக்கின்ற பேரழகி, பரகாச வடிவுடையவள் ஆன அபிராமி அம்மையின் திருவடிகள் என் மீது உள்ளனவாகும்.

6. சென்னியது உன்பொன் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் தன்பர மாகம பத்ததியே.

செந்நிறமான திருமேனியுடைய பெருமாட்டியே! அடியேனின் தலைமீது பொருந்தியிருப்பது நின் அழகிய திருவடித் தாமரை மலர்!

என் மனத்துள் பொருந்தியிருப்பது உன் தெய்வத்தன்மை பொருந்திய மந்திரம்! உன்னையே தியானம் செய்து வாழும் அடியாருடன் ஒன்று கூடி முறை முறையாகப் பாராயணம் செய்பவை நின் மேலான ஆகம நெறிகளாகும்.

7. **ததியுறு மத்தின் சுழலுமென் ஆவி தளர்விலதோர்**
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே.

தாமரையில் வீற்றிருக்கின்ற நான்முகனும், பிறைச்சந்திரனை அணிந்த தடையையுடைய நின் கணவனான சிவனும், திருமாலும் வணங்கி எப்போதும் துதிக்கின்ற சிவந்த திருவடிகளை உடையவளே! செந்நிறத் திலகம் அணிந்த நெற்றியை உடையவளே!

தயிரில் சுழல்கின்ற மத்தினைப் போல் பிறப்பு இறப்புகளிடையே சுழலும் என் உயிர், தளராதபடி ஒரு நல்ல கதியை, அடையுமாறு நீ திருவுள்ளம் கொள்ள வேண்டும்.

8. **சுந்தரி எந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்**
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாளென் கருத்தனவே.

பேரழகி, எம் தந்தையான சிவபெருமானின் தேவி, என் பாசமான விலங்கை எல்லாம் என்னிடம் உள்ள அருளால் எழுந்தருளி வந்து அழிக்கும் சிந்துரம் போன்ற சிவந்த நிறம் உடையவள், மகிடாசுரனின் தலைமீது நிற்கும் அந்தரி, நீலநிறம் கொண்டவள், எக்காலத்தும் அழிவில்லாத கன்னித் தன்மை உடையவள், நான்முகனின் கபாலத்தைத் தாங்கிய திருக்கையினாள் ஆகிய அபிராமி அம்மையின் தாமரை மலர் போன்ற திருவடிகள் என்றும் என் உள்ளத்தில் உள்ளன.

9. **கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பில்**
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமு மாரமும் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலு நீயும்அம் மேவந்தென் முன்நிற்கவே.

என் அன்னையே! எம் தந்தை சிவபெருமானின் திருவுள்ளத்தில் உள்ளனவும், அவர்தம் கண்களில் உள்ளனவும், அழகிய பொன்மலை யான மேருவைப் போல் பருத்துள்ளனவும், அழுத ஞானசம்பந்தரான பிள்ளைக்குப் பால் தந்தவையும் ஆன மிக்க அருள் வாய்ந்த அழகிய கொங்கைச் சுமையும், அவற்றின்மீது அணியப் பெற்றுள்ள முத்து மாலையும், சிவந்த திருக்கையிடத்தில் உள்ள கரும்பு வில்லும் மலர்

அம்பும், மயிலிறகின் அடியைப்போன்ற பற்களும் ஆகிய இவற்றை யெல்லாம் உடைய நின் முழுத் திருக்கோலத்துடன் வந்து என்முன் நின்று தரிசனம் அளித்தருளுக!

10. **நின்றும் மிருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை**
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்து
அன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

எழுதப்படாததான வேதத்தில் பொருந்திய அரிய பொருளே! அருள்வடிவாக விளங்குபவளே! உமையே! முன்காலத்தில் இமயமலை யில் பிறந்தருளிய பார்வதியே! அழியாத முத்தியின்பமே! நான் நின்ற வாறும் இருந்தவாறும் படுத்தவாறும் நடந்தவாறும் துதிப்பது நின்னையே யாகும். என்றும் தலை தாழ்த்தி வணங்குவது உன் தாமரைமலர் போன்ற திருவடிகளையே ஆகும்.

11. **ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்**
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே.

ஆனந்த வடிவம் ஆகி, என் அறிவாகி, நிறைந்த அமுதம் போன்றவளாகி, வான் முதலிய ஐம்பூதங்களும் தன் வடிவாய்க் கொண்ட வள் அபிராமி. அப்பெருமாட்டியின் நான்கு மறைகளுக்கும் முடிவாக நிற்கும் திருவடிகள், வெண்மையான நிறம் கொண்ட சுடுகாட்டைத் தன் ஆடும் இடமாய்க் கொண்ட எம் சிவபெருமானின் முடிக்கு மாலையாய் விளங்குகின்றன.

12. **கண்ணிய துன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்துபத்தி**
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்தில் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே.

எம் அன்னையே! உலகங்கள் ஏழையும் படைத்தவளே! நான் எப்போதும் நினைப்பது உன் புகழை! பலகாலும் பயின்று உணர்வது உன் திருப்பெயரை! மனம் கசிந்து பக்தி பண்ணியது நின் திருவடித் தாமரைகளில்! பகல் இரவாகச் சென்றடைந்தது நின் அன்பரின் கூட்டத்தை! இவ்வளவுக்கும் நான் முன்பு செய்த புண்ணியம் யாது?

13. **பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்**
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.

உலகங்கள் பதினான்கையும் ஈன்றவளே! அருள் கொண்டு ஈன்ற அந்தப் பதினான்கு உலகங்களையும் காத்தவளே! பின் அவற்றை மறைத்து வைப்பவளே! நஞ்சின் கருமையைக் கழுத்தில் உடைய சிவபெருமானுக்கு முன் தோன்றிய தத்துவமாய் உள்ளவளே! என்றும் முதுமை அடையாத திருமாலுக்கு தங்கையே! பெருந்தவத்தினை உடையவளே! நான் உன்னையே அல்லாமல் வேறு ஒரு கடவுளை வழிபடுவது முறையாகுமா?

14. **வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்**
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் தண்ணளியே.

எம் தாயே! நின்னை வணங்குபவர்கள் வானவரும் அசுரர்களும் ஆவார்கள். உன்னை மனத்துள் தியானிப்பவர்கள் நல்லவரான நான்முகனும் நார்ராயணனும் ஆவார்கள். தம் மனத்துள் அன்பினால் பிணித்து இன்பம் அடைபவர் அழியாத பரமானந்த வடிவுடைய சிவபெருமான் ஆவார். இத்துணைச் சிறப்பும் கொண்ட நின் திருவருள், உலகத்தில் நின்னைத் தரிசிப்பவர்க்கு எளிதாகின்றது! இஃதென்னே வியப்பு!

15. **தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்**
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே.

பண் போல் பேசும் இனிய சொற்களும் சிறந்த நறுமணமும் உடைய சியாமள தேவியான பசுங்கிளி போன்ற அன்னையே! உன் குளிர்ந்த அருளைப் பெறுதற்காக முன்பிறவிகளில் பலகோடி தவங்களைச் செய்தவர்கள் இந்த உலகத்தை ஆள்கின்ற அரசுரிமைச் செல்வத்தை மட்டுமா பெறுவார்கள்? அறிவை உடைய தேவர்களுக்குரிய இந்திரபதவியான செல்வத்தையும், பின் எக்காலத்தும் அழியாத முத்தியான வீட்டுலக வாழ்வையும் பெறுவார்கள்.

16. **கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்**
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேயெண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
அளியேன் அறிவள விற்குஅள வானது அதிசயமே.

கிளி போன்ற தாயே! அடியவரின் மனத்தில் நிலைபெற்று விளங்கும் ஒளியே! உலகத்தில் விளங்கும் ஒளிகளுக்கெல்லாம் ஆதாரமான பொருளே! நினைத்துப் பார்க்கும்போது எந்தத் தத்துவமும்

ஆகாமல் யாவற்றையும் கடந்து நின்ற பரவெளியே! வான் முதலிய ஐம்பெரும் பூதங்களாய் விரிந்துள்ள தாயே! இத்துணைப் பெரியவளான நீ இந்த எளியேனின் சிற்றறிவின் எல்லைக்குள் அடங்கியது வியப்பானதே யாகும்.

17. **அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாம்**
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மானது அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.

வியப்புக் கொள்ளத்தக்க திருவடிவுடைய அபிராமி அம்மை, தாமரை மலர்கள் எல்லாம் துதிக்கும் வெற்றியுடைய திருமுகமுடைய அழகுக் கொடி யாவாள். துணைவியான இரதியின் கணவனான காமன் பெற்ற வெற்றி தோல்வியடையுமாறு முன்னால் நெற்றிக் கண்ணால் பார்த்தவர் சிவபெருமான். அத்தகையவரின் திருவுள்ளம் தன் வெற்றியாக மாற, அதனால் அன்றோ அவ்வம்மையார் இடப்பாகத்தைப் பெற்றது?

18. **வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்**
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே.

அன்னையே! நீ கவர்ந்து கொண்ட இடப்பாகத்தையுடைய சிவ பெருமானும் நீயும் கூடி மகிழ்ந்திருக்கும் நிலையில் உள்ள கோலமும், உங்களின் திருமணக் கோலமும், என் உள்ளத்தில் இருந்த அகந்தையைப் போக்கி ஆண்ட பொலிவுடைய திருவடிகளுமாகி, எழுந்தருளி வந்து, கூற்றுவன் என் உயிரைக் கவர வரும்போது அவன் காண வெளிவந்து நின்று, அவனால் வர இருக்கும் துன்பத்தைப் போக்கியருள வேண்டும்.

19. **வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சும்**
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பது மேவி உறைபவளே.

ஒளியுடைய ஒன்பது கோணங்களில் வீற்றிருக்கின்ற தாயே! புறத்தில் யாவரும் காண எழுந்தருளிய நின் அழகிய கோலத்தைத் தரிசித்து என் கண்களும் மனமும் கொண்ட மகிழ்ச்சி வெள்ளத்திற்குக் கரைகாண முடியாது. ஆயினும் என் உள்ளத்தில் தெளிந்த ஞானம் உள்ளது. இன்னும் என்ன என்ன அனுபவத்தை வழங்க வேண்டும் என்பது நின் திருவுள்ளமோ?

20. உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வ ரொருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோவமுதம்
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ்ச மோவென்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.

எங்கும் நிறைந்தவளாயும் தளர்ச்சியற்றவளாயும் உள்ள மங்கலமான அபிராமியே! நீ வீற்றிருக்கின்ற நின் திருக்கோயில் நின் கணவர் சிவபெருமானின் இடப்பாகமோ? உன்னைத் துதிக்கின்ற வேதங்களின் மூலமான பிரணவமோ? அவ்வேதங்களின் உச்சியான உபநிடதங்களோ! அமுதம் நிறைந்துள்ள வெண்மையான சந்திரனோ? தாமரை மலரோ? என் உள்ளமோ? அனைத்தும் மறைவதற்கு இடமான கடலோ?

(வாரிதி – கடல்)

21. மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

அபிராமி மங்கல வடிவுடையவள், செம்மையான குடம் போல் பருத்த கொங்கைகளை உடையவள்; மலையின் மகள்; பலவண்ணங் களையுடைய வளையல்களை அணிந்தவள்; எல்லாக் கலைகளுக்கும் தலைவியான மயில் போன்றவள்; பாயும் கங்கையில் பெருகும் அலைகள் அமைதியாய்த் தங்கும் புரிந்த சடையையுடைய சிவபெருமானின் ஒரு பக்கத்தைத் தனக்கே உரியதாய்க் கொண்டு ஆள்கின்ற உரிமை உடையவள். பொன்னிறம் வாய்க்கப் பெற்றவள். நீலநிறம் உற்றவள். வெண்மை நிறம் கொண்டவள். பசுமையான கொடி போன்றவள்.

(பிங்கலை – பொன்னிறம் உடையவள்)

22. கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
அடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந்த தாண்டுகொள்ளே.

பூங்கொடி போன்றவளே! இளைய வஞ்சிக் கொம்பு போன்றவளே! தகுதியில்லாத எனக்குத் தானே வந்து அருள் அளித்த கனியே! வேதமான மலரில் பரவிய மணம் போல் விளங்குபவளே! பனியையுடைய பெரிய இமயமலையில் தோன்றிய பிடி போன்றவளே! நான்முகன் முதலிய தேவரைப் பெற்றெடுத்த தாயே! அடியவன்

இவ்வுலகத்தில் இறந்து பின்பு இங்கேயே வந்து பிறவாமல் இருக்குமாறு தடுத்தாட் கொள்ள வேண்டும்.

23. கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளே யனைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே.

பரந்த மூவுலகங்களுக்குள்ளும் அந்தர்யாமியாய் உள்ள அன்னையே! எல்லாவுலகங்களுக்கும் அப்பாற்பட்டு விளங்குபவளே! உள்ளத்தில் இன்பத்தை விளைவிக்கும் கள்போன்றவளே! அக்கள்ளால் களிக்கும் களிப்பாய் விளங்குபவளே! எளியவளான என் கண்ணில் உள்ள மணிபோன்றவளே! யான் நின்னையே அல்லாமல் வேறு உருவத்தைத் தியானப் பொருளாக மனத்தில் கொள்ள மாட்டேன். உன் அன்பர்களின் கூட்டத்தை என்றும் பிரிந்து நில்லேன். பிற சமயங்களை விரும்ப மாட்டேன்.

24. மணியே மணியின் ஒளியே யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

மாணிக்கம் போன்றவளே! மணியில் பொருந்திய ஒளி போன்றவளே! விளங்கும் உயர்ந்த மணிகளால் இயற்றப்பட்ட அணி போன்றவளே! அணிந்து கொள்ளும் அணிகளுக்கு அழகாக விளங்குபவளே! நின்னை அணுகாதவர்க்கு நோய் போன்றவளே! பிறவி என்ற நோய்க்கு மருந்தாக விளங்குபவளே! தேவர்க்குப் பெருவிருந்தாக விளங்குபவளே! நின் தாமரையன்ன அடிகளை வணங்கிய பின்பு வேறு ஒருவரையும் வணங்க மாட்டேன்.

25. பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னெ தவங்கள் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கும்
அன்னே யுலகுக் கபிராமி யென்னும் அருமருந்தே
என்னெ இனியுன்னை யான்மற வாமனின்று ஏத்துவனே.

முதற் கடவுளரான மும்மூர்த்திகளுக்கும் அன்னையே! உலகத்து உயிர்களின் நன்மையின் பொருட்டு அபிராமி எனப் போற்றப்பெறு கின்ற அருமருந்தாய் விளங்குபவளே! உன்னை நான் மறவாமல் என்றும் துதிப்பேன். இனிமேல் எனக்கு என்ன கவலை? இத்தகைய பேறு எனக்கு வாய்த்ததற்குக் காரணம் யாது? நின்னடியாரின் பின்னால் திரிந்து அவர்களைப் போற்றிப் பிறப்பை அறுப்பதற்குத் தக்கபடி முன் பிறவிகளில் தவத்தை ஆற்றியுள்ளேன்.

26. ஏத்து மடியவர் ஈரேழ் உலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழலணங் கேமண நாறுநின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே.

நறுமணம் கமழும் கடம்ப நறுமலர்களை அணியும் கூந்தலை யுடைய தெய்வப் பெண்ணே! நின்னைத் துதிக்கும் அடியவர் பதினான்கு உலகங்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் விளங்கும் மும்மூர்த்திகளாவர். அங்ஙனமாக, மணம் வீசும் நின் இரண்டு திருவடிகளுக்கு எளியவனான என் நாவில் தங்கிய பொலிவற்ற சொற்கள் ஏற்புடையதாய செயல் சிரித்தற்கு இடமாய் உள்ளது!

27. உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணியெனக்கே
அடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருள்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே.

பேரழகுடையவளே! வஞ்சமாக யான் அறியாமல் என்னைத் துன்புறுத்தும் பிறவிக் குவியலை அழித்தாய். அதற்குமுன் உள்ளம் உருகும் அன்பை அடியேன் பெறும்படி செய்தனை! நின் தாமரை மலர் போன்ற திருவடிகளை எளியேன் சூடிக் கொள்ளும்படியான பணியை எனக்கு அருளினாய்! என் மனத்துள் உள்ள அழுக்கையெல்லாம் நின் அருளான தூய்மையான நீரால் கழுவித் தூய்மை செய்தாய்! இவ்வளவுக்கும் காரணமான நின்னருளை என் என்று கூறுவது?

28. சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க் கேயழி யாவரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.

சொல்லும் அதன் பொருளும் போன்று ஆனந்தக் கூத்து இயற்றும் துணைவரான சிவபெருமானுடன் பொருந்தியுள்ள நறுமணம் உடைய பூங்கொடி போன்றவளே! உன் புதிய மலர் போன்ற திருவடிகளை அல்லும் பகலும் தொழும் அடியவர்களுக்குப் பகைவர்களால் அழிவு வாராத அரச செல்வமும் பயன் தரும் முறையில் செல்லும் தவ வாழ்வும் இறுதியில் சிவலோக பதவியும் கிடைக்கப் பெறும்.

29. சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவமுயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே.

எட்டுவகைப்பட்ட சித்திகளும், அவற்றினை அளிக்கும் தெய்வமாய் நிற்கும் பராசக்தியுமாகி, சக்தியைத் தம்மிடத்தே பொருந்தச் செய்துள்ள சிவமும், தவத்தை இயற்றுபவர் அடையும் முத்தியின்பமும், முத்தியைப் பெறுதற்கு மூலமும், அந்த மூலமாகித் தோன்றி எழுந்த அறிவும் ஆகிய இவை எல்லாமாய் இருப்பவள், அறிவில் நின்று பாதுகாக்கும் திரிபுர சுந்தரியே ஆவாள்.

30. **அன்றே தடுத்தென்னை யாண்டுகொண் டாய்கொண்ட தல்லவென்கை**
நன்றே உனக்கினி நானென் செயினு நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேயென் உமையவளே.

ஒருவடிவாய் விளங்குபவளே! பல வடிவங்களாய் விளங்குபவளே! வடிவம் இல்லாத அருவாய் விளங்குபவளே! என் அன்னையான உமையவளே! முன்னர் ஒருநாள் என்னைத் தடுத்தாட் கொண்டாய்! அவ்வாறு தடுத்தாட் கொண்டதை இல்லை எனக் கூறுதல் நியாயமா உனக்கு? இனி நான் என்ன செய்தாலும், கடலின் நடுவில் போய் விழுந்தாலும், என் குற்றத்தை மறந்து என்னைக் கரையேற்றுதல் திருவுளப் பாங்கைப் பொறுத்ததாகும்.

31. **உமையும் உமையொரு பாகனு மேகவுரு வில்வந்திங்கு**
எமையும் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
அமையு மமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே.

உமையாளும், அந்த உமையை இடப்பாகத்தில் கொண்ட சிவபெருமானும் ஒரே வடிவில் வந்து ஒன்றுக்கும் பற்றாத என்னைத் தம்மிடம் அன்பு செய்யும்படி தடுத்தாட் கொண்டனர். இனி நாம் போய் நற்கதியைடைதற்கு ஏற்றது எது என்று ஆராய்வதற்கு ஏற்ற வேறு சமயங்களும் இல்லை. நான் வீடுபேற்றை அடையப்போவது உறுதி. ஆதலால் ஈன்றெடுக்கும் தாயானவளும் இல்லை. மூங்கில் போன்ற தோளையுடைய பெண்டின் மீது வைக்கும் ஆசையும் இனிப்போதும்!

32. **ஆசைக் கடலில் அகப்பட் டருளற்ற அந்தகன்கைப்**
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே.

எம் இறைவரான சிவபெருமானின் இடப்பாகத்தில் எழுந்தருளி யிருக்கும் நல்ல அணிகளை அணிந்த தாயே! ஆசை என்ற கரையில்லாத கடலில் துரும்புபோல் அகப்பட்டு, அதன் காரணமாக

இறப்பு உண்டாகும் காலத்தில், அருள் இல்லாத இயமனின் கைப்பாசத்தில் அகப்பட்டுத் துன்பப்பட இருந்தேன். இத்தகைய என்னை நின் திருவடிகள் என்ற நறுமணம் உடைய தாமரையை வலிய என் தலைமீது சூட்டியருளி என்னை ஆண்டுகொண்ட பெருங்கருணையை என்னவென்று சொல்வேன்?

33. இழைக்கும் வினைவழி யேயடுங் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப
னோடிவந்தே.

எம் பெருமானின் உள்ளமானது உருகச்செய்யும், சந்தனக் கலவை பூசப்பெற்ற குவிந்த கொங்கைகளை உடைய யாமளை என்ற மென்மையானவளே! விதித்த விதியின்படி கொல்ல வரும் இயமன் என்னை நடுங்கச் செய்து அழைக்கும்போது, நீ எழுந்தருளி, 'நீ அஞ்ச வேண்டா' என்று அருளுவாயாக! நான் துன்பம் அடையும்போது வேறு எவரையும் நாடாமல் உன்னையே நாடி வந்து 'தாயே' என்று அடைக்கலமாய் அடைவேன்.

34. வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போ யிருக்கும் சதுமுகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி யாகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

அபிராமி தன்னிடம் வந்து அடைக்கலம் அடையும் அடியவர்க்குப் பொன் உலகப்பதவியை அன்புடன் தருவாள். தந்து, தான் சென்று நான்முகனின் நான்கு முகங்களிலும், பசிய தேன் சிந்தும் துளசிமாலை சூடிய கௌத்துவ மணி யணிந்த திருமாலின் மார்பிலும், சிவபெருமானின் இடப்பாகத்திலும், செந்தேன் சிந்தும் தாமரை மலரிலும், பரந்த கதிர்களை யுடைய கதிரவனிடத்திலும் திங்களிலும் வீற்றிருப்பாள்.

(அபிராமி அன்னையே நான்முகன் முதலானவராக விளங்குவள்.)

35. திங்கட் பகவின் மணநாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே.

அலைகளை உடைய பாற்கடலில் கொடிய கண்ணையுடைய ஆதிசேடனான பாம்பணை மீது அறிதுயில் கொள்ளும் பரம் பொருளே! சிவபெருமானின் திருமுடியில் உள்ள பிறைச்சந்திரனின் மணம்

கமழும் நின் சிறிய அடிகளை அடியவரான எம் தலையிலே வைத்தருள்வாய்! இங்ஙனம் வைத்தருள எங்களுக்கு ஒப்பற்ற தவம் கிடைத்தவாறு என்னே! எண்ணில்லாத தேவர்களுக்கும் இத்தகைய சிறந்த தவம் கிடைக்குமா?

(பகவு – பிளவு)

36. பொருளே பொருள்முடிக் கும்போக மேயரும் போகஞ்செய்யும்
மருளே மருளில் வரும்தெரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளேது மின்றி யொளிவெளி யாகி இருக்குமுன்தன்
அருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே.

செல்வப் பொருளே! அச்செல்வத்தால் நிறைவேறும் இன்பமே! அரிய இன்பங்களைத் துய்ப்பதால் வரும் மயக்கமே! மயக்கத்தின் முடிவில் உண்டாகும் தெளிந்த ஞானமே! தாமரையான இருக்கையில் அமர்ந்தவளே! எளியேன் மனத்தில் மாயையின் இருள் சிறிதும் இல்லாமல் நீங்கிடச் சுடர் வீசும் பெருவெளியாய் விளங்கும் நின் திருவருள் எத்தகையது என்று யான் அறியேன்!

37. கைக்கே யணிவது கன்னலும் பூவும் கமலமன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியும் திருவுடை யானிடம் சேர்பவளே.

எட்டுத் திசைகளையே தாம் அணியும் அழகான ஆடையாய்க் கொண்ட இறைவனின் இடப்பாகத்தைச் சேர்ந்து எழுந்தருளியுள்ள தாய் அபிராமி தன்கையில் அணிந்திருப்பவை கரும்பும் மலர்களும் ஆகும். தாமரை மலர் போன்ற உடலில் அணிவது தூய வெண்மையான முத்து மாலை. நஞ்சை யுடைய பாம்பினது படத்தைப் போன்ற இடையில் அணிந்திருப்பவை பல மணிகள் பதித்த கோவையும் பட்டும் ஆகும்.

38. பவளக் கொடியில் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி யாளுகைக்கே.

எல்லாப் போகங்களிலும் சிறந்த இந்திர போகத்தை அடைந்து வானவர்க்கு அரசனாய் அமராவதியை ஆளும் பொருட்டு, பவளக் கொடி போன்று கனிந்த செவ்வாயும், குளிர்ந்த முறுவலும், வெண்மையான பற்களும் தமக்குத் துணையாய் விளங்க எங்கள் இறைவரான சிவபெருமானை நெகிழுமாறு மோதி, உடுக்கை போன்ற இடையைத் தளரச் செய்யும் இரண்டு கொங்கைகளை உடைய அபிராமி அன்னையை வணங்குவீராக! இது பயன் அளிக்கும் செயல்!

39. ஆளுகைக்கு உன்ற னடித்தா மரைகளுண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே.

மூன்று புரங்களும் அழிவதற்கு திருமாலான அம்பைத் தொடுத்த மேருமலையான வில்லையுடைய சிவபருமானின் இடப்பாகத்தில் வீற்றிருக்கின்ற ஒளியுடைய நெற்றியை யுடையவளே! என்னை ஆள்வதற்கு உன் திருவடித் தாமரைகள் உண்டு. இயமனிடம் செல்லாமல் மீண்டும் உய்வதற்கு நின்னுடைய கடைக்கண் பார்வை உள்ளது. இவற்றுடன் தொடர்பு கொள்ளாதது என் குறையே! உன்னருள் குறையன்று!

40. வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய எண்ணமன் றோமுன்செய் புண்ணியமே.

ஒளியுடைய நெற்றி பொருந்திய கண்ணை உடையவளை, தேவர்கள் யாவரும் வந்து வணங்கி விரும்பி வழிபடுவதற்கு நினைத்த எம் பெருமாட்டியை, அறியாமையுடைய உள்ளத்தில் காண்பதற்கு நெருங்கியவள் அல்லாத கன்னியை, தரிசித்து அன்பு கொள்வதற்கு உண்டான எண்ணம், முன்பிறவியில் யாம் செய்த புண்ணியம் அன்றோ!

41. புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே.

என் உள்ளமே! புதிதாய் மலர்ந்த பூங்குவளை மலர் போன்ற கண்களையுடைய அபிராமி அன்னையும், அப்பெருமாட்டியின் சிவந்த நிறம் கொண்ட கணவரும் கூடி, நம்மை ஆட்கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால், நாம் இருக்கும் இடத்தை அடைந்து நம்மைத் தம் அடியார் இருக்கும் இடத்தில் இருக்குமாறு செய்து, நம் தலைமீது தம் திருவடியைப் பதிப்பதற்குத் தக்கவாறு, நல்ல புண்ணியங்களை நாம் முன்னர் செய்துள்ளோம்.

42. இடம்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடம்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடம்கொண்ட கொள்கை நலம்கொண்ட நாயகி நல்லரவின்
படம்கொண்ட அல்குல் பணிமொழி வேதப் பரிபுரையே.

நல்ல பாம்பின் படத்தைப் போன்ற அல்குலையும் குளிர்ந்த சொற்களையும் வேதமான சிலம்பையும் உடைய அபிராமியன்னை, பரந்த இடத்தைக் கொண்டு பருத்து ஒன்றுக்கு ஒன்று இணையாய் வளர்ந்து, இறுகி, மெத்தெனக் குழைவுற்று, முத்து மாலை சூடிய கொங்கையான மலையைக் கொண்டு, சிவபெருமானின் வலிமை வாய்ந்த மனத்தைத் தான் எண்ணியபடி எல்லாம் ஆடச்செய்த விதத்தையும் அதற்கு ஏற்ற அழகையும் உடையவள் ஆவாள்.

43. பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே.

சிலம்பை அணிந்த சிறிய திருவடிகளையும் பாசாங்குசத்தையும் உடையவள் ஐந்து மலர் அம்புகளை உடையவள், இன்சொல் பேசும் திரிபுர சுந்தரி, சிந்துரம் போல் சிவந்த திருமேனியுடையவள், உள்ளத்தினால் உவகத்துக்குத் தீமை செய்ய வேண்டும் என்று எண்ணி அவ்வாறு செய்த முப்புரங்களில் இருந்த வஞ்சகர்களான அசுரர்களும் அஞ்சுமாறு வளைத்த மேருமலையான வில்லை உடையவரும் தீப்போன்ற மேனி உடையவரும் ஆகிய சிவ பெருமானின் சரி பாதியில் வீற்றிருப்பவள் ஆவாள்.

44. தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே யவர்தமக் கன்னையு மாயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கு மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே.

சிவபெருமானை இறைவரை மணம் செய்து கொள்ள வேண்டும் எனத் தவம் செய்தவளான உமையம்மையே, எம் இறைவனான சிவபெருமானின் மனை வாழ்வுக்குரிய மங்கலமாக விளங்கும் பெருமாட்டியாய் ஒருவகையால் அவர்க்குத் தாயும் ஆவாள். ஆகையினால், தேவர் யாவர்க்கும் மேலான தலைவியாவாள். இப்பெருமாட்டியை இறைவியாகக் கொண்டு தவம் செய்வதே அல்லாமல் வேறு கடவுள் உண்டு என எண்ணி மெய்ம்மையாய் அவர்க்குத் தொண்டு செய்து தளர மாட்டேன்.

45. தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.

அன்னையே! நின் திருவடிக்குத் தொண்டு செய்யாமலும், நின் திருவடியை வணங்காமலும் உண்மையான பொருள் இன்னது என்று தெளிந்து, தம் உள்ளம் விரும்பியவற்றையே செய்தவர் பண்டைக் காலத்தில் இருந்தார்களோ, இல்லையோ! நின் திருவருள் அனுபவத்தால் முன் இருந்தார்கள் ஆதலால், அப்படியே யானும் அவர்களைப் பார்த்து அவர்களைப் போன்று தொண்டு செய்தால் அது வஞ்சமாகுமா? அவ்வாறின்றி அவர்கள் செய்கை தவமாவது போல் என் செய்கையும் தவமாகுமோ? நான் மாறுபாடானவற்றைச் செய்தாலும், உன் மகன் என்பது கருதிப் பொறுப்பது நன்றாகும். அவ்வாறின்றி வெறுத்து ஒதுக்கல் நன்றன்று.

46. வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற் றானிடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே.

46. பாற்கடலினில் தோன்றிய புதிய நஞ்சையுண்டு அதனால் கருமை அடைந்த கழுத்தை உடைய சிவபெருமானின் இடப் பாகத்தில் பொருந்திய பொன் போன்ற மேனியை உடையவளே! தாங்கள் வெறுப்புக்குரிய வற்றைத் தம் அன்பர்கள் செய்தாலும் அவர்களை அறிவு மிக்க சான்றோர் பொறுக்கும் இயல்பு இவ்வுலகத்தில் புதியதன்று. எனவே நீ ஏற்றுக் கொள்ளாமல் விலக்கும் இயல்புடைய செயல்களை நான் செய்யினும் அவற்றையெல்லாம் நீ பொறுப்பாய் என நினைத்து உன்னைத் துதிக்கின்றேன்.

47. வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேஒருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டுமெட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

அழிவில்லா இன்பவாழ்க்கை வாழும் விதத்தைப் பரம் பொருளால் பெற்ற ஞானத்தைக் கொண்டு நான் அறிந்து கொண்டேன். அது உள்ளத்தில் ஒருவர் விரும்பித் தியானிக்கும்படி உள்ளதன்று. சொல்லால் இன்ன தன்மையது என்று கூறும் தன்மை யுடையதன்று. கடல் ஏழும் உலகம் ஏழும் பெரிய மலைகள் எட்டும் எட்டாமல், இரவு பகல் என்பனவற்றைச் செய்யும் சுடர்களான சந்திர சூரியர்களுக்கு நடுவில் அமைந்துள்ளது.

48. சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

ஒளிரும் கலைகளையுடைய பிறைமதி பொருந்திய சடை முடியுடைய மேருமலை போன்ற சிவபெருமானுடன் இணைந்து பழகும் நறுமணம் உள்ள பசுங்கொடியான அபிராம வல்லியைத் தம் மனத்தில் பொருத்தித் தியானம் செய்து, அதனால் துன்பம் நீங்கி இமைப்போதிலேனும் யோகத்தில் இருப்பவர்கள் குடலும் கொழுப்பும் இரத்தமும் கூடிய குடிலான உடம்பில் மீண்டும் வந்து சேர்வாரோ?

49. **குரம்பை அடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட**
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்து
அரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே.

நரம்புகளைப் பொருந்தி எழும் இசையின் வடிவான இறைவியே! இந்த உடலான குடிசையைச் சார்ந்து சில காலம் இருத்தற்குக் குடியாப் புகுந்த அடியேனின் உயிர், கொடிய இயமனுக்கு விதியால் வகுக்கப்பட்ட காலத்தை அணுகி வருந்துகின்ற அச்சமயத்தில், அரம்பையும், அவர்களுடன் வரும் பிற தேவ மங்கையரும் நின்னைச் சூழ்ந்தபடி வர, நீ எழுந்தருளி வந்து வளையல் அணிந்த கையால் அபயம் காட்டி 'நீ அஞ்சவேண்டா' என்று கூறி என்னைக் காத்திடல் வேண்டும்.

50. **நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச**
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்று
ஆயகி யாதி யுடையாள் சரணம் அரணமக்கே.

எல்லா உலகங்களுக்கும் இறைவி, நான்கு முகங்களை உடையவள், நாராயணி, தாமரைபோன்ற கைகளில் ஐந்து மலர் அம்புகளை உடையவள், சம்புவின் (சிவபெருமானின்) மனைவி, சங்கரி, யாமளை, நஞ்சை வாயில் கொண்ட பாம்பை மாலையாக அணிந்தவள், வராகி, சூலம் உடையவள், மாதங்கி எனப் பலவிதமாகச் சொல்லப்படும் திருப் பெயர்களினால் புகழையுடைய அபிராமி அன்னையின் திருப்பாதங்கள் நமக்குக் காவலாகும்.

(கியாதி – புகழ்)

51. **அரணம் பொருளென் றருளொன் றிலாத அசுரர்தங்கள்**
முரணன்று அழிய முனிந்தபெம்ம மானும் முகுந்தனுமே
சரணம் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே.

மூன்று மதில்களே உண்மையான பொருள் என்று நினைத்து அருள் என்பது இல்லாத அசுரர்களின் வலிமையும் முன்னொரு நாள் அழிந்து போகும்படி சினந்தவரான சிவபெருமானும் திருமாலுமே உன்

திருவடிகளே அடைக்கலமாகும் என்று வேண்டிக்கொள்ள, அவர்களுக்கு அருள்செய்து கொண்டு நிலையாய் நின்றவள் இறைவி அபிராமி. அப்பெருமாட்டியின் அடியார்கள் இறப்பு பிறப்பு ஆகிய இரண்டையும் இவ்வுலகத்தில் அடையமாட்டார்கள்.

52. வையந் துரக மதகரி மாமகு டம்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாளடித் தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

பிறைச்சந்திரனைத் தலையில் அணிந்த சிவபெருமானின் அழகுடைய தேவி அபிராமியின் திருவடித் தாமரைகளுக்கு முன்பிறவிகளில் அன்பு செலுத்திய தவம் உடைய அடியார்களுக்கு உரிய சின்னங்கள், தேர், குதிரை, மதமுடைய யானை, சிறந்த மகுடம், பல்லக்கு, மற்றமன்னர் திறைசெலுத்தும் பொன், மிகுந்த விலையுடைய பொன்மாலை முதலியவையாகும்.

(வையம் – தேர், துரகம் – குதிரை)

53. சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே.

அபிராமியின் மிகவும் சிறிய இடையில் அணியப்பட்ட சிவந்த பட்டும், மிகவும் பெரிதாய் விளங்கும் கொங்கையும், அதில் அணிந்துள்ள முத்துமாலையும், பிச்சிப்பூ சூடப் பெற்றிருக்கும் மிகக் கரிய கூந்தலும், மூன்று கண்களும் என்னும் இவற்றைத் தம் உள்ளத்தில் நினைத்துத் தனித்திருந்து தியானம் செய்பவர்க்கு இவ்வாறு தியானிக்கும் பயனின்றி வேறு பயன் உடைய தவம் இல்லை.

54. இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

மானிடரே! செல்வர் ஒருவரிடத்தே சென்று உம் வறுமை நிலையை எடுத்துக் கூறி அவரால் அவமானப்படுத்தப்பட்டு நிற்கின்ற நிலை வேண்டா என்று மனத்தில் எண்ணுவீரானால், நாள்தோறும் பெருந்தவம் பயிலாமையைக் கற்ற இழிந்த குணத்தவரிடம் ஒருபோதும் செல்லாத நிலையை என்னிடம் வைத்தருளிய திரபுர சுந்தரியின் திருவடித் தாமரைகளை அடைவீராக!

55. மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற(து)
அன்னாள் அகமகி ழானந்த வல்லி அருமறைக்கு,
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றிலையே.

அபிராமி அன்னை ஆயிரம் மின்னல்கள் ஒரு திருமேனியானது உருக் கொண்டு வந்தாள் போன்ற கோலம் உடையவள், தன்னைத் துதிக்கும் அடியார் உள்ளம் மகிழ்வதற்கும் காரணமான ஆனந்தக் கொடி, அரிய வேதத்தின் தொடக்கமாகவும் நடுவாகவும் முடிவாகவும் விளங்குபவள். இத்தகைய முதல்வியை மனிதர் நினைத்தாலும் நினையாது போயினும் அப்பெருமாட்டிக்கு ஆக வேண்டியது ஒன்றில்லை.

(வேதத்தின் தொடக்கம் பிரணவம். நடு என்றது சாகை. முடிவு என்றது உபநிடதங்கள்)

56. ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்றன் னெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானுமென் னையனுமே.

அன்னை அபிராமி ஒருபொருளான பராசக்தியாய் நுட்பமான மணம் முதலியவற்றை அடக்கிக் கொண்டுள்ள அரும்புபோல் இருந்து, பின் உலகை ஆக்கல் முதலிய செயல்களைச் செய்கின்ற பல்வேறு சக்திகளாக விரிந்து இவ்வுலகத்தில் எவ்விடத்தும் அந்தர்யாமியாய் உள்ளாள். என்றாலும் அவை யாவற்றையும் கடந்து விளங்குவாள். இத்தகைய இயல்புடைய இந்த அபிராமி அன்னை எளியேனின் எளிய மனத்துக்குள் ஒருகணமும் பிரியாது நிற்பது என்ன வியப்பு! இந்த உண்மையை அறிபவர்கள் ஊழி முடிவில் தோன்றிய பெருவெள்ளத்தில் ஆல இலையில் துயின்ற திருமாலும் என் இறைவனான சிவபெருமானுமே யாவார்கள்.

57. ஐயன் அளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லாம்
உய்ய அறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யும்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்தன் மெய்யருளே.

சிவபெருமான் அளந்து கொடுத்த இரண்டு நாழி நெல்லைக் கொண்டு உலகத்தில் உள்ள உயிர்கள் யாவும் வாழும்படி முப்பத்திரண்டு அறம் செய்த உன்னையும் பாக்களினால் பாராட்டிப் புகழ்ந்து, பின்பு வேறு ஒருவரிடத்தில் செம்மையான பசுந்தமிழ்ப் பாமாலையைப் பாடி அதையும் அவரிடம் கொண்டு சென்று அவரைப்

பற்றிய இயல்புகளைப் பொய்யும் மெய்யுமாய்க் கலந்து பாடச் செய்தனையே! இதுவோ, அம்மையே, உன்னருள்?

58. அருணாம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையனல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமுமல் லால்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே.

செந்நிறத் தாமரை மலரிலும், என் உள்ளத்தாமரை மலரிலும் அமர்ந்திருக்கும் தாமரை அரும்பைப் போன்ற கொங்கையை யுடைய அபிராமியின் தகுதியுடைய அருள் மலரும் விழியான கண்ணாகிய தாமரையும், முகமாகிய தாமரையும், கைகளான தாமரைகளும், திருவடி களான தாமரைகளும் அல்லாமல் வேறு ஒரு புகலிடத்தையும் நான் பார்த்ததில்லை.

59. தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேனொற்றை நீள்சிலையும்
அஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே.

ஒரு நீண்ட வில்லும் ஐந்து அம்புகளும் முறையே கரும்பாகவும் மலராகவும் கொண்டு விளங்கும் என் அபிராமித் தாயே! இதுவே யல்லாது வேறு பற்றுக்கோடு இல்லை! என்று நினைத்து, உன்னை வழிபட்டுத் துதிக்கும் தவநெறியில் நான் உள்ளத்தைச் செலுத்தவில்லை! பஞ்சும் துன்புறுத்தும் மென்மைத் தன்மையுடைய அடிகளை உடைய அன்னையர், தாம் பெற்ற மைந்தர் அறியாமை உடையவராய் இருந்தாலும், அவர்களைத் தண்டிக்க மாட்டார்கள்.

60. பாலினும் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே.

பாலைவிட இனிய சொல்லை உடையவளே! குளிர்ச்சியுடைய தாமரைமலர் போன்ற நின் திருவடிகளை வைத்திடத், திருமாலும் மற்றத் தேவர்களும் வணங்கும்படி நின்ற கொன்றை மலரை அணிந்துள்ள சடையின் மேலிடத்தைவிட, கீழே நின்று வேதங்கள் பாடும் உண்மையான பிரணவ பீடங்கள் நான்கைவிட, எளியேனின் நாற்றம் உடைய நாய்த் தலையைப் போன்ற தலை சிறந்ததா?

61. நாயே னையும்இங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னை
உள்ளவண்ணம்
பேயே னறியும் அறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே.

என் அன்னையே! மலையரசனின் மகளே! சிவந்த கண்ணை யுடைய திருமாலின் தங்கையே! நாய் போன்ற எளியேனையும் உன் அருளுக்குரிய பொருளாகக் கொண்டு விரும்பி நீயே வலியவந்து, இவனை ஆட்கொள்ளலாமா வேண்டாவோ என்ற நினவும், ஆட்கொள் வதற்குரிய தகுதி பற்றிய நினைவும் இல்லாமல் என்னை ஆட்கொண் டாய்! நின்னை அறியும் அறிவைப் பேய் போன்ற எனக்கு அருள் செய்தாய்! நான் என்ன பாக்கியத்தைச் செய்தேன்!

62. தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே.

மேருமலையான பொன்வில்லைக் கைக்கொண்டு மூன்று அசுரர்க்குரிய மூன்று புரங்களையும் அழித்து, மதம் உடைய கொடிய யானையின் தோலைப் போர்த்துக் கொண்ட சிறந்த வீரன் சிவபெரு மானின் உடல் முழுவதும் கொங்கையான குரும்பையின் அடை யாளத்தை வைத்த தலைவியான அபிராமியின் சிவந்த கையில் உள்ள கரும்புவில்லும் மலர் அம்புகளும் எப்போதும் என் மனத்தில் நிற்பவை யாகும்.

63. தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமயம்
ஆறும் தலைவி இவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறும் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.

சான்றோர்கள் 'இவை வைதிக சமயங்கள்' என்று சொல்லும் சமயங்கள் ஆறினுக்கும் தலைவியாய் இருப்பவள் அபிராமியாய் இருப்பதை அறிந்தும், வேறு சமயமும் உண்டு என அதைப் பாராட்டுகின்ற வீணருக்கு, அவர்கள் உண்மையினை அறியுமாறு, சில காரணங்களைக் காட்டி, இனிச் செல்ல இருக்கும் கதிக்கு வழி இது என உரைக்கும் உறுதிப் பொருள் குன்றின் பாறை மீது அடிக்கும் மர ஆப்பினைப் போன்றதாகும். குன்றுப் பாறை மீது அடிக்கும் மர ஆப்பு வீணாவதன்றி உள்ளே செல்லாதது போன்று இந்த அறிவுரைகள் பயன் இல்லாமல் உள்ளத்தில் சிறிதும் புகா.

64. வீணே பலிகவர் தெய்வங்கள் பால்சென்று மிக்கவன்பு
பூணேன் உனக்கன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்

பேணே னொருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில முந்திசை நான்கும் ககனமுமே.

அபிராமி அன்னையே! வீணே உயிர்ப் பலியை ஏற்றுக் கொள்கின்ற தெய்வங்களிடம் போய் மிகுந்த அன்பு அவற்றிடம் கொள்ள மாட்டேன். உனக்கே அன்பை மேற்கொண்டேன். உன் புகழையன்றி வேறு எவர் புகழையும் நான் ஒரு பொழுதும் விரும்ப மாட்டேன். பெரிய நிலத்திலும் எட்டுத் திசைகளிலும் வானத்திலும் எங்கும் உன் திருமேனியை யன்றி வேறு ஒன்றையும் நான் அறியேன்.

65. ககனமும் வானும் புவனமும் காணவிற் காமனங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே.

அபிராமி அன்னையே! முன் காலத்தில் வானத்தே உள்ள உலகங்களும் தேவர் உலகமும் கண்கூடாகக் காணும்படி, மன்மதனின் உடலை எரித்த தவமுனிவரான சிவபெருமானுக்கு, பெரிய கைகள் பன்னிரண்டு செம்மையான முகங்கள் இரு மூன்று என்று தோன்றிய முதிர்ந்த ஞானத்தை உடைய முருகனான பிள்ளையும் நின் வல்லபத்தால் அன்றோ தோன்றினான்?

66. வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன்றி லேன்பசும் பொன்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே.

பசிய பொன்மலையான மேருமலை வில்லாகப் பிடித்த சிவபெருமானுடன் வீற்றிருக்கின்ற தேவியே! சிறியேன் எவ்வகையான ஆற்றலையும் அறிய மாட்டேன். சிறியவனான நான் நின் தாமரை மலர் போன்ற திருவடியான தளிரையல்லாமல் வேறு ஒரு பற்றும் இல்லாதவன். தீவினையுடைய யான் தொடுத்த சொற்கள் வீணானவை ஒன்றாலும், அவற்றின் இடையிலே வைத்தவை நின் திருப்பெயர்கள் தோத்திரங்கள் ஆகும்.

67. தோத்திரம் செய்து தொழுதுமின் போலுநின் தோற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கடொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

அபிராம வல்லியே! உன்னை வாயால் துதித்துக் கையினால் வணங்கி, மின்போல் ஒளிரும் நின் திருமேனித் தோற்றத்தை ஓர் இமைப்போதேனும் உள்ளத்தில் இருத்தித் துதிக்காதவர், வள்ளன்மை, குலம், கோத்திரம், கல்வி, நல்ல குணங்கள் என்பனவற்றால் குன்றி, இவ்வுலகம் முழுதும் உள்ள குடிசைகள் தோறும் பிச்சைப்

பாத்திரத்தைக் கையிலே எடுத்துக் கொண்டு பிச்சைகேட்டுத் திரிவார்கள்.

68. பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊறும் முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே.

மண்ணும், நீரும், தீயும், விரைவாக வீசும் காற்றும், எங்கும் பரவியிருக்கின்ற வானமும், தம்மிடத்தில் பொருந்தியுள்ள மணம், சுவை, ஒளி, ஊறு, ஓசை என்னும் ஐந்தும் ஒன்றுபட அவற்றுடன் கூடிய தலைவியாம் சிவகாம சுந்தரியின் சிறிய திருவடிகளைச் சேரும் தவம் உடைய அடியார்கள் தமக்கு உரியதாய்ப் பெறாத செல்வம் ஏதும் இல்லை.

69. தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன வெல்லாம் தருமன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

மேகம் போன்ற பூவைச் சூடிய கூந்தலை உடைய அபிராமி தாயின் கடைக்கண் பார்வையானது அடியார்களுக்குச் செல்வத்தை அளிக்கும்; கல்வியை அளிக்கும்; ஒருநாளும் தளர்ச்சியை அறியாத உள்ளத்தை அளிக்கும்; தெய்வ ஒளியுடைய வடிவையும் அளிக்கும்; உள்ளத்தில் வஞ்சனை இல்லாத நல்லவரின் கூட்டத்தை அளிக்கும்; நல்லவை யாவற்றையும் அளிக்கும்.

70. கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.

கடம்பவனம் என்ற தலத்தில், பண்ணும் 'இனியது' என்று விரும்பிக் கேட்டுக் களிக்கின்ற குரலான வீணையும், திருக்கைகளும், கொங்கைகளும், உலகத்தவர் கண்டு மகிழும் பசுமையான நிறமும் உடையவராய் எழுந்தருளி யாழ்ப்பாணரான மதங்கர் குலத்தில் உதித்த பெண்களில் ஒருத்தியாய்த் தோன்றியருளிய எம் பெருமாட்டி அபிராமி வல்லியின் பேரழகை யான் களிக்கும்படி கண்களால் கண்டு மனத்துள் இருத்திக் கொண்டேன்.

71. அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக்கு என்குறையே.

கழிந்து போதற்கு வருந்தி நின்ற என் நெஞ்சமே! தன் மேனி அழகுக்கு எவரும் ஒப்பாகாத கொடி போன்றவள், அரிய வேதங்களில் பயில்வதால் சிவந்த திருவடித் தாமரையை உடையவள், குளிர்ந்த அழகிய பிறையைச் சூடுகின்ற முடியை உடையவள். இத்தகைய யாமளை என்ற பூங்கொம்பு நமக்கு வேண்டியவற்றையெல்லாம் தந்து காப்பாற்ற இருக்கும் போது நெஞ்சே; நீ வருந்தாதே!

72. என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கின்
நின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

பெரிய உயர்ந்த வானத்தில் உள்ள மின்னலுக்கு ஒரு குறையைக் காட்டி அதைவிட மெலிவாய் விளங்கும் சிறிய இடையை உடைய மென்மையான தன்மையுடையவளே! எம் இறைவரான சிவபெருமான் தன் குறைதீரும் பொருட்டுத் தன் சடைத்தலைமீது வைத்துக் கொண்ட நின் திருவடித் தாமரைகளை என் குறை தீரும் பொருட்டுத் தளராமல் நின்று துதித்து வழிபடுகின்றேன். எனவே, இக்காரணத்தால் நான் பிறவேன். ஒருகால் நான் இனிப் பிறந்தேனானால் அதற்குக் காரணம் நின் குறையின்றி வேறு யார் குறை? உரைத்தருளுவாயாக!

73. தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கொளி செம்மையம்மை
நாமம் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே.

அபிராமித் தாயின் மலர்மாலை கடம்ப மலர் மாலை. அவள் ஆயுதங்கள் மலரம்புகள். வில் கரும்பு. அவளுடைய வயிரவ அடியார் வழிபடும் பொழுது யாமமாகும். எம்மைக் காத்தலுக்கு ஏற்றவாறு வைத்துள்ளது அவளது திருவடி. அவளுக்குச் செம்மையான கரங்கள் நான்கு, மேனியின் நிறம் செம்மை. அவ்வம்மையின் திருப்பெயர் திரிபுரசுந்தரி. அவளுடைய விழிகள் ஒன்றுடன் இரண்டு (மூன்று).

74. நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

மூன்று கண்களை யுடைய சிவபெருமானும், நான்கு வேதங்களும், திருமாலும், நான்முகனும் துதிக்கின்ற அபிராமி வல்லியின் திருவடிகளையே முத்தியான பயன் என நினைத்து வழிபடும் அடியார்கள், அரம்பை மகளிர் நடனம் செய்யவும், இனிய பாடல்களைப் பாடவும் அவற்றைப் பார்த்தும் கேட்டும் அனுபவித்துப் பொன் படுக்கையில் அவருடன் பொருந்தி, இன்பம் அடைவதற்கு இடமான கற்பகச்

சோலையில் இந்திர பதவியைப் பெற்றிருப்பார்களா? (அப்பதவியை அவர்கள் விரும்பார்.)

75. தங்குவர் கற்பகத் தாருவி னீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே.

எட்டுக்குல மலைகளையும் பெருகி எழும் ஏழு கடல்களையும் பதினான்கு உலகங்களையும் பெற்ற திருவயிற்றையும், மணம் பரந்ததும் பூவைச் சூடியதுமான கூந்தலையும் உடைய அபிராமி வல்லியின் திருமேனியைத் தியானம் செய்யும் அடியார், வான் உலகத்தில் உள்ள கற்பகச் சோலை நிழலில் வீற்றிருப்பர். பின்னர் இவ்வுலகத்தில் பிறந்து இறந்து தவறாமல் வரும் பிறவியைத், தம்மைப் பெறும் தாயார் இல்லாமையாலே, மங்கச் செய்வர்.

76. குறித்தேன் மனத்தினின் கோலமெல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே.

வண்டுகள் குடைவதால் மணம் உடையத் தேன் சிந்துகின்ற கொன்றைமலர் மாலையைச் சூடிய சடையுடைய சிவபெருமானின் ஒரு பகுதியை, அவரை அழகால் வென்று கவர்ந்து கொண்டு, அங்குக் குடிபுகுந்த ஐந்து மலர் அம்புகளை உடைய பயிரவியே! நின் கோலம் முழுவதையும் என் மனத்தில் துதி செய்தேன். அதன் பயனாக நின் திருவுளக் கருத்தை அறிந்து, இயமன் வரும் வழியை அறிந்து அதைத் தடுத்தேன்.

77. பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

சான்றோர், பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, வஞ்சகரின் உயிரான அவியை (உணவை) உண்கின்ற உயர்ந்த சண்டி, காளி, விளங்கும் கலைகளான வயிரங்களால் ஆன வட்டமான மேகலையை அணிந்தவள், மாலினி, சூலி, வராகி என்று குற்றங்களை அழிக்கும் நான்குமறைகளில் கூறப்பட்ட திருப்பெயர்களைக் கூறுவர்.

78. செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவு மெழுதிவைத் தேனென் துணைவிழிக்கே.

செப்பையும் பொன் குடத்தையும் போல் விளங்கும் அழகிய கொங்கை மீது பூசும் கலவைச் சாந்தினை உடைய அபிராம வல்லியின் காதில் அணிந்த அழகிய முத்துக் கொப்பையும், வயிரக் காதணியையும், திருவிழியின் கடைப் பார்வையையும், பவளம் போல் சிவந்த உதடுகளையும், அவற்றுக்கிடையில் பொருந்திய புன்னகையையும் என் இரண்டு கண்களிலும் எழுதி வைத்தேன்.

79. விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

அபிராமி வல்லியின் திருவிழிகளுக்கு எனக்கருள அருள் உண்டு. அவளது அந்த அருளை அடையும் பொருட்டு வேதம் சொன்ன நெறியில் வழிபட எனக்குத் துணையாக என் மனம் உண்டு. இங்ஙனம் அந்த நல்வழி இருக்கவும் பழிச் செயல்களில் உழன்று திரிந்து, கொடிய பாவச்செயல்களையே செய்கின்றதன் பயனாய்ப் பாழான நரகக் குழியில் விழுந்து ஆழ இருக்கும் கயவரோடு இனி எனக்கு என்ன உறவு இருக்கிறது?

80. கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே.

பொன் தாமரையில் வீற்றிருக்கும் அரிய அழகிய தேவி, சற்றும் தகுதியற்ற என்னைத் தன்னடியாருள் ஒருவனாய்ச் சேர்த்தவிதமும் அதனால் என் கொடிய வினைகளைப் போக்கிய விதமும், அருள் செய்ய என்னிடம் விரைந்து வந்த விதமும், தன் திருக்கோலத்தை உள்ளவாறு காட்டிய விதமும், அவளைத் தரிசித்த என் கண்ணும் உள்ளமும் ஆனந்தம் கொண்டு மகிழும் விதமும், என்னை ஆனந்த நடனம் ஆட்டுவித்த விதமும் ஆ, என்னே வியப்பு!

81. அணங்கே யணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கே னொருவரை வாழ்த்துகி லேனெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்கண் நீவைத்த பேரளியே.

அபிராமி வல்லியே! வெவ்வேறு சக்திகள் நின் பரிவாரங்கள். ஆகையால் வேறு எவரையும் நான் வணங்க மாட்டேன். வாழ்த்த மாட்டேன். மனத்தில் வஞ்சனை உடையவருடன் நான் சேர மாட்டேன். என்னுடையவை எல்லாம் நின்னுடையவை என்று எல்லாவற்றையும் உனக்கு ஒப்படைத்து விட்டு அமைதியாய் இருப்பர் சிலர். சிலரான அத்தகைய யாவருடனும் மாறுபாடில்லாமல் இருப்பேன். அறிவு சிறிதும்

இல்லாதவன் ஆயினும் என்னிடம் நீ வைத்த பெருங்கருணை இருந்தபடி என்னே!

82. அளியார் கமலத்தில் ஆரணங் கேயகி லாண்டமுநின்
ஒளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுந்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே.

வண்டுகள் மொய்க்கின்ற தாமரை மலரில் வீற்றிருக்கின்ற தேவியே! எல்லா அண்டங்களும் நின் ஒளியாகப் பரவி நிற்பதற்குக் காரணமான அழகிய நின் திருமேனியைத் துதிக்கும் தோறும் என் அந்தக்கரணங்கள் நான்கும் மகிழ்ந்து பூரிக்கும். பின்பு எல்லைகளை எல்லாம் கடந்து பரவெளியாக ஆகிவிடும். அங்ஙனமாயின், நீ அருள் செய்த இந்த வியப்பான உபாயத்தை நான் எவ்வாறு மறப்பேன்?

83. விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே.

அன்னையே! பலவகையான நிறமும் வடிவும் மணமும் கொண்ட புதிய மலர்களைத் தூவி வழிபாடு செய்து, உன் திருவடிகளான தாமரை மலர்களை இரவும் பகலும் வணங்கும் அடியார்கள், இப் பிறவிக்குப் பின்பு தேவர் யாவரும் புகழ்கின்ற பதவியையும் அயிராவத ஊர்தியையும் கங்கையையும் பாம்பையும் வச்சிரப்படையையும் கற்பகச் சோலையையும் உடைய இந்திரர்கள் ஆவார்கள்.

84. உடையாளை ஒல்குசெம் பட்டுடை யாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளையிங் கென்னையினிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.

அடியார்களே! உலகங்களும் அவற்றில் உள்ளவையும் உடைமையாய் உடைய பெருமாட்டியை, அசையும் பட்டாடை உடையவளை, விளங்கும் சந்திரனைச் சூடிய செம்மையான சடை உடையவளை, வஞ்சனை உடையவரின் மனத்தினைச் சேராதவளை, விளங்கும் நுட்பமான இடை உடையவளை, எம் சிவபெருமானின் இடப் பாகத்தில் வீற்றிருப்பவளை, இவ்வுலகத்தில் இனிப்பிறக்குமாறு படைக்காதவளை, உங்களையும் இனிப்படைக்காதபடி அவள் வடிவத்தைத் தரிசித்து இன்புற்றிருப்பீராக!

85. பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமல ரைந்தும் கரும்புமென் னல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே.

என் துன்பங்களையெல்லாம் போக்கும் திரிபுர சுந்தரியின் கைகளில் உள்ள பாசமும், அங்குசமும்; குளிர்ந்த சிறகையுடைய வண்டுகள் ஒலிக்கின்ற புதிய மலர்களான ஐந்து அம்புகளும், கரும்பாகிய வில்லும், அழகிய மேனியும், சிறிய இடையும், கச்சணிந்த குங்குமம் பூசிய கொங்கைகளும், அவற்றின் மேல் அணியப்பெற்ற முத்து மாலைகளும் பார்க்கும் திக்குகளில் எல்லாம் தோன்றும்.

86. மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.

பாலையும் தேனையும் வெல்லப் பாகையும் போன்ற இனிய சொற்களை உடையவளே! திருமாலும் நான்முகனும் தேடவும், மறைகள் தேடவும், தேவர்கள் தேடவும் அவர்களுக்குப் புலப்படாமல் நின்ற திருவடிகளையும் வளையலை அணிந்த கைகளையும் தாங்கி, மேல் எழுந்த மூன்று பிளவுகளை உடைய சூலத்தைக் கொடிய கூற்றுவன் என்னைக் கவர்ந்து கொண்டு போக என்மீது வீசும்போது, யான் காணும்படியாக என் முன் வெளிப்பட்டு நின்று என்னைக் காத்தருள் வாயாக!

87. மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
அழிக்கும் தலைவ ரழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகம்கொண் டாளும் பராபரையே.

நெற்றிக் கண்ணால் காமனை அழித்த தலைவர் சிவபெருமானின், அக்காமனாலும் அழிக்கலாகாத தவவிரதத்தின் இயல்பை, எல்லா உலகத்தில் உள்ளவரும் பழிக்கும்படியாக அவருடைய ஒரு பாதியைக் கவர்ந்து கொண்டு, ஆளும் மேலான பொருளுக்கும் மேலான பொருளாய் விளங்குபவளே! சொல்லும் சொல்லுக்கும் நினைக்கும் நினைவுக்கும் எட்டாமல் உள்ள நின் திருவடிவம் என் விழிக்கும் யான் செய்த பூசைக்கும் வெளிப்படையாய்த் தோன்றி வெளிப்பட்டு நின்றது.

88. பரமென் றுனையடைந் தேன்தமி யேனுமுன் பத்தருக்குள்
தரமன் றிவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகம் சிறந்தவளே.

பகைவரான முப்புராதிகளின் மூன்று அரண்களையும் அந்த நாளில் எரியும் பொருட்டாக மேருமலையை வில்லாக வளைத்தும் தாமரை மலரில் வீற்றிருக்கின்ற நான்முகனின் தலை ஒன்றைக் கிள்ளியும் (ஆகிய செயல்களைச்) செய்த கையையுடைய

சிவபெருமானின் இடப்பாகத்தில் வீற்றிருப்பவளே! வேறு துணையற்ற நானும் மேலான பொருள் என்று உன்னை நான் அடைந்தேன். ஆதலால் என் அடியாருக்குள் இவன் இருக்கத் தகுதியுடையவன் அல்லன் என்று நீ எண்ணி என்னைத் தள்ளி விடக்கூடாது.

89. சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தருநின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கம் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே.

சிறப்பான ஆதார கமலங்களில் எழுந்தருளியிருப்பவளே! உடம்புடன் உள்ள உறவு நீங்கிப் போய் அறிவற்று மயங்கும் காலத்தில் நின் சிவந்த திருவடிகளை அடியேன் தலையில் வைக்கவும், துரியம் கடந்த உறக்க நிலையான பேரானந்த அனுபவத்தைத் தந்தருளவும், முத்தியைத் தரும் நின் கணவரான சிவபெருமானும் நீயும், என்னிடம் வருவது உங்கட்கு வருத்தம் தருவது என்றாலும், அதை மேற்கொண்டு என்முன் எழுந்தருளல் வேண்டும்.

90. வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னைந்தநல்கு மெல்லியலே.

வான் உலகத்தில் வாழ்கின்ற தேவர்க்கு விருந்தாகப் பாற்கடலில் தோன்றிய அமுதத்தைத் தந்த கோமளையான அபிராம வல்லி, நான் அவளைத் தேடி வருந்தாதபடி, என் உள்ளத் தாமரையில் வலியத் தானே வந்து எழுந்தருளினாள். அதையே தன் பழைய இருப்பிடமாகக் கருதுமாறு வீற்றிருந்தாள். இனி எனக்குக் கைவராத பொருள் ஏதும் இல்லை!

91. மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பகடு ஊரும் பதந்தருமே.

மெல்லிய நுட்பமான இடையுடைய மின்னல் போன்றவளை, விரிந்த சடையை உடைய சிவபெருமான் தழுவிக் கொண்ட மென்மையான கொங்கையையுடைய பொன்போல் விளங்குபவளைப் புகழ்ந்து வேதங்களில் சொல்லிய வண்ணம் தொழுபவர்களை அணுகித் தொழும் அடியார்க்குப் பல இசைக்கருவிகள் முழங்க, வெண்மையான யானையான ஐராவதத்தின் மீது ஏறி உலாவரும் இந்திர பதவியை அவள் அளிப்பாள்.

92. பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்தன்
இதத்தே யொழுக அடிமைகொண் டாயினி யாதொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியும்செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே.

முதன்மையுடைய தேவர்களான நான்முகன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும் வணங்கித் துதிக்கும் புன்னகையுடைய அன்னையே! நல்ல பக்குவம் அடைந்து அதில் என் மனம் உருகி உன் திருவடியிலே பற்றுக் கொண்டு உன் உள்ளத்துக்கு உகந்த நெறியில் ஒழுகுமாறு ஆட்கொண்டாய். எனவே, நான் வேறு ஒருவர் சமயக் கொள்கையைச் சிறந்தது எனக் கருதி அறிவு மயங்க மாட்டேன். அச்சமயத்தவரின் நெறியில் செல்ல மாட்டேன்.

93. நகையே யிஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநாம்
மிகையே யிவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

இந்த உலகங்களை யெல்லாம் பெற்ற அபிராமி அன்னைக்குத் தோன்றிய கொங்கை தாமரை அரும்பு. அருள் பழுத்த கண் மருட்சியுடைய மானின் கண். இப்படிக் கூறுவது சிரிப்புக்கு இடமாகும். அப்பெருமாட்டிக்கு முடிவும் இல்லை. அப்படியே பிறவியும் இல்லை. அங்ஙனமாக, அப்பெருமாட்டியை மலையின் மகள் எனக் கூறுவது வீணேயாகும். இத்தகைய இவளுடைய இயல்புகளை ஆராய்ந்து பின் விரும்புதல் என்பது நம் அறிவுக்கு அப்பாற்பட்டதாகும்.

94. விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே.

அபிராமியை விரும்பித் தொழுகின்ற அடியவரின் கண்களில் நீர் பெருகிட, உடல் புளகம் கொண்டு மயிர்க்கூச்செறிய, பொங்கிவரும் ஆனந்த மயமாகி, உயிர் அறிவை இழந்து, தேனைக் குடித்த வண்டைப் போல் மயங்கி, சொல் தடு மாற்றம் அடைந்து, முன் கூறியவை எல்லாம் பொருளுடையனவாய் அதற்குக் காரணமான பித்தை உடையவர் ஆவர். அவ்வாறாயின், அபிராமி சமயம் நன்மை பயப்பதே ஆகும்.

95. நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது
ஒன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லாம்
அன்றே உனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே.

எக்காலத்தும் அழியாத குணமலையே! கருணைக் கடலே! இமவான் ஈன்ற மகளே! நன்மையே விளைந்தாலும் தீமையே விளைந்தாலும் அவற்றை நான் சிறிதும் அறிவதில்லை. எல்லாம் உனக்கே பாரம். எனக்குள்ள உடல் பொருள் ஆவி ஆகிய யாவற்றையும் உனக்கு ஆளான அன்றே தந்துவிட்டேன். இனி எனக்கு ஏது கவலை? ஏதும் இல்லை.

96. கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வாரெழு பாருக்கும் ஆதிபரே.

மென்மையான பூங்கொடி போன்றவளை, உள் இதழ்களை யுடைய தாமரை மலரில் வீற்றிருக்கின்ற யாமளாகமத்தில் புகழ்ந்து பேசப்படுகின்ற வல்லியை, குற்றம் ஏதும் இல்லாதவளை, ஓவியத்தில் எழுத இயலாத சாமள நிறம் கொண்ட எல்லாக் கலைகளுக்கும் தலைவி யான மயில் போன்றவளை, தம்மால் இயன்ற வரையும் தொழுபவர்கள் ஏழுலகங்களுக்கும் அரசர் ஆவார்கள்.

97. ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

கதிரவன், சந்திரன், அக்கினி, குபேரன், தேவரின் தலைவனான இந்திரன், தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன், மூன்று புரங்களை அழித்த சிவ பெருமான், முரன் என்பவனை அழித்த திருமால், பொதிய மலையில் வாழும் அகத்தியர், பகைவரைக் கொல்லும் வேல் படையை உடைய முருகன், விநாயகர், காமன் முதலிய சாதனை செய்தவர்கள் எண்ணற்ற பேர்கள் அபிராமியை வழிபடுவார்கள்.

98. தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயுந் தலைவந்த வாறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகவறி யாமடப் பூங்குயிலே.

உண்மை அறிவுடைய அன்பர்களின் உள்ளத்தில் அல்லாது வஞ்சரின் பொய் நிரம்பிய மனத்தில் புகுதற்கு அறியாத இளமை பொருந்திய பூங்குயில் போன்றவளே, நின் திருவடிகளை உன் ஊடலைத் தணித்தற்காக வருடி, அதனால் உன் ஊடல் நீங்காமையை உணர்ந்து, பின் அடிகளை வணங்கித் தலைக்கு அணியாய் அணிந்து கொண்ட சங்கரனுக்கு, அப்போது கையில் இருந்த தீயும், தலையில் இருந்த கங்கையும் ஒளிர்ந்தது எங்கே?

99. குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்கன்று இமவா னளித்த கனங்குழையே.

கயிலாய மலைக்குத் தலைவனான இறைவனுக்கு முன் காலத்தில் இமவான் திருமணம் செய்து தந்த கனமான காதணியை அணிந்தவளான அபிராமி கடம்பவனத்திலே குயிலாக விளங்குவாள்; இமயமலையிலே அழகுடைய மயிலாக விளங்குவாள்; வானத்தில் வந்து தோன்றும் கதிரவனாய் ஒளி வீசிக் கொண்டிருப்பாள்; அன்பால் நினைவாரின் உள்ளக் கமலத்தில் அன்னமாக எழுந்தருளியிருப்பாள்.

100. குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சிலெப் போதும் உதிக்கின்றவே.

தன்னைக் குழையுமாறு தழுவிக் கொண்ட சிவபெருமானின் மார்பில் அணிந்த அழகிய கொன்றை மாலையின் நறுமணம் வீசும் கொங்கைகளையுடைய கொடி போன்ற அபிராமியின் மூங்கிலுடன் போரிட்டு வென்ற அழகிய தோள்களும், கரும்பான வில்லும், ஆணையும் பெண்ணையும் ஒருவரை ஒருவர் விரும்பும்படி செய்யும் தேன் பொருந்திய மலர் அம்புகளும், வெண்மையான புன்னகையும், மான்கள் போன்ற கண்களும் என் மனத்தில் எந்த நேரத்திலும் தோன்றி விளங்குகின்றன.

101. ஆத்தாளை எங்க ளபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசங் குசுமங் கரும்பும்அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு
தீங்கில்லையே.

எல்லா உயிர்களுக்கும் தாயானவளை, அடியவரான எங்கள் அபிராம வல்லியை, உலகம் யாவற்றையும் உண்டாக்கியவளை, மாதுளம் பூப்போன்ற நிறம் உடையவளை, உலகம் முழுவதையும் காத்தவளை, அங்குசம் பாசம், மலர் அம்புகள், கரும்பு ஆகியவற்றைக் கையில் உடையவளை மூன்று விழிகளை உடையவளை வணங்குபவர்க்கு ஒரு தீங்கும் உண்டாகாது.

அபிராமி அந்தாதி உரை முற்றுப் பெற்றது.

மணிவாசகர் பதிப்பகத்தின் மலிவுப் பதிப்பு நூல்கள்

சித்தர் பாடல்கள்	ரூ.22.00
பட்டினத்தார் பாடல்கள்	ரூ. 7.50
தாயுமானவர் பாடல்கள்	ரூ.15.00
பாரதியார் கவிதைகள்	ரூ.17.50
பாரதிதாசன் கவிதைகள்	ரூ.16.00
திருக்குறள் மூலம்	ரூ. 4.00
திருக்குறள் தெளிவுரை	ரூ. 7.75
விவேகசிந்தாமணி	ரூ.14.00
நடராஜர் புகழ் மாலை	ரூ. 2.50
கைவல்ய நவநீதம்	ரூ. 3.00
அபிராமி அந்தாதி (உரையுடன்)	ரூ. 3.00
அற்புதத்திருவந்தாதி	ரூ. 4.00
கற்பக விநாயகர் அருசனை	ரூ. 1.50
கந்தர் சக்ஷ்டி கவசம்	ரூ. 3.00
சண்முக கவசம்	ரூ. 3.00
திருப்பாவை	ரூ. 3.00
திருவெம்பாவை	ரூ. 3.00
காரியசித்தி மாலை	ரூ. 7.50

பதிப்புச் செம்மல்

டாக்டர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; புலவர் குழு உறுப்பினர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பன்னிரண்டு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய தாகூர் நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர் துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களை வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். **பதிப்புச்செம்மல்** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம்:

மணிவாசகர் நூலகம்

12–B, மேல சன்னதி, சிதம்பரம் – 608 001.

55, லிங்கித் தெரு, சென்னை – 600 001.

28–A, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை – 625 001.

15, ராஜ வீதி, கோயமுத்தூர் – 641 001.

28, கிளைவ்ஸ் கட்டிடம், திருச்சி – 620 002.

தொலைபேசி : சிதம்பரம் 2799 – சென்னை 513707